தொல்காப்பிய மன்றம் - கனடா

Association for Tolkappiyam - Canada

தொல்காப்பிய வழி, தொன்மைத் தமிழர் வரலாறும் பண்பாடும் அறிவோம்

பிரிவு - 3 (2016 இல் பிறந்தோர்)

# தமிழ் தொன்மையான மொழி

நாம் தமிழர், நாம் பேசும் மொழி தமிழ்மொழி.

உலகில், பல்லாயிரக்கணக்கான மொழிகள் பேசப்பட்டன. அவற்றில் சில மொழிகள் முற்றாக அழிந்துவிட்டன. உலகில், இன்று வாழும் மொழிகளுள் மிகப் பழமையானது தமிழ்மொழி. தமிழ் ஒரு செம்மொழி, 3000 ஆண்டுப் பழமை கொண்ட மொழி. பிற மொழித் துணை இல்லாமலே தனித்து இயங்கும் சிறப்புடையது. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும் கொண்டது தமிழ்மொழியாகும். சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பழங்குடி தமிழ்க்குடி.

இன்று கிடைக்கும் தமிழ் நூல்களுள் காலத்தால் முந்தியது தொல்காப்பியம் . இது ஒரு இலக்கண நூலாகும். தொல்காப்பியத்தை எழுதியவர் தொல்காப்பியர். தொல்காப்பியத்தைப் பின்பற்றிப் பல இலக்கண நூல்கள் எழுந்தன. ஆனால், இன்றும், தொல்காப்பியத்தின் அடிப்படை விதிகள் மாறாமல் இருப்பது தொல்காப்பியத்தின் சிறப்பாகும்.

உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டுமாக, தமிழ் முதல் எழுத்துக்கள் முப்பது. தமிழுக்கே உரிய சிறப்பான எழுத்து “ழ” ஆகும்.

தமிழில், தொல்காப்பியத்தை அடுத்து, எட்டுத் தொகை, பத்துப்பாட்டு ஆகிய இலக்கியங்கள் தோன்றின. அதனை அடுத்து தமிழில் எழுந்த “திருக்குறள்” உலகப் “பொதுமறை” ஆகும்.

நாமும் செம்மொழியாம் தமிழ்மொழியைக் கற்போம், வளர்ப்போம், அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வோம்.

வாழ்க தமிழ்

நன்றி. வணக்கம்.